# திறவுகோல்

2052 சித்திரை
மாத இதழ்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேர்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# மாரியப்பன் எனும் ஜானி

## (சிறுகதை)

சற்று முன் நான் ஒரு கொலை செய்து விட்டு வந்திருக்கிறேன்... என்றால், அது அப்படித்தானா...!

அந்த கொலையை நான் தான் செய்தேனா என்ற சுய தடுமாற்றமெல்லாம் இல்லை தான். ஆனாலும்... அடித்தட்டு மனம் தானாக அலை செய்து அதில் நீந்திப் பார்ப்பது... மூழ்கிப் பார்ப்பது இயல்புதானே.

என் பேர் ஜானி. எனக்கு இன்னொரு பேரும் இருக்கு. மாரியப்பன்.

அப்டி ஒரு பேரு.. இப்டி ஒரு பேருனு யோசிச்சா.... அதுக்கு பின்னால ஒரு மேட்டுக்குடி வாழ்வும்... விளிம்பு நிலை வாழ்வும் சம்மதமே இல்லாத தூரத்துல சைக்கிள் ஓட்டிட்டு இருக்கும்.

கரணம் தப்பினால் மரணம் தான் என் வாழ்வு. நான் என் அப்பாவை பார்த்ததே இல்லை. ஆறு மாச குழந்தையா இருந்த போதே குடித்தே செத்தவர் அவர். அவர் மீது எவ்வித வருத்தமும் எனக்கு இருந்ததில்லை. காரணமெல்லாம் நான் யோசித்ததும் இல்லை. என் வருத்தமெல்லாம் உயிரோடு இருக்கும் என் அம்மா பற்றி தான். ஒற்றை ஆளாக வளர்த்த அந்த ஜீவனின் ஆன்மாவில் தான் நான் வசிக்கிறேன் என்பது தான் என் ஆழ்ந்த நம்பிக்கை.

எத்தனையோ நாட்கள் காந்திபுரத்துக்கும்...... உக்கடத்துக்கும்......டவுனுக்கும்..... சுங்கத்துக்கும் நடந்தே வந்திருப்பேன். நடந்தே போயிருப்பேன். பஸ்சுக்கு காசு இல்லை. காசு தர யாரும் இல்லை. ஊரும் உறவும் இந்த சமூகமும் இந்த உலகமும் என்னை ஒரு போதும் கடைக் கண் கொண்டும் கண்டதில்லை. இந்த உலகத்தில் நான் தூசுக்கும் கீழே என்றால் நான் நம்பித்தான் ஆக வேண்டும். எனக்கு கனவுகளே இல்லை. நான் மதில் மேல் நடக்கும் பூனையின் நிறம் பற்றி ஒரு போதும் யோசித்ததில்லை. அதன் பசி பற்றிய சிந்தனைக்குள் வால் ஆட்டவும் மறந்து விடும் மதில் பற்றி தான் யோசனை.

எண்பதாயிரம் சேர்த்து வைப்பது என்பது மூன்றாண்டுகளின் ரொக்கம். தவணை முறையில் வாயையும் வயிற்றையையும் கட்டுவது.

நடந்து நடந்து.......லிப்ட் கேட்டு லிப்ட் கேட்டு....... நண்பர்களிடம் பைக் கடன் வாங்கி...... கடன் வாங்கி....... என் மீதே எனக்கு வெறுப்பு வந்தது தான் உண்மை. கண்ணாடி முன் நிற்கையில் எல்லாம் மனம் உடைத்த பைக்கின் சில்லுகளின் ஆயிரம் வெலோசிட்டி உருமல்கள் தான் அன்றாடம். எனக்கு சிரிக்கவே மறந்து போன ஒரு தருணத்தில்......என் முதலாளியிடம் சென்று, 'இந்த மாதிரி ஒரு பைக் வாங்கலான்னு இருக்கேன்.. கடன் குடுங்க....மாசம் மாசம் கட்டிடறேன்....' என்றேன். அவரும் நம்பிக்கையாக வாழ்த்தி விட்டு சரி என்றார். அதன் பிறகு நடந்த உடன் பணிபுரிபவர்களின் சூழ்ச்சியோ... வலையோ....... அது நடக்காமல் போனது. கேட்கும் போதெல்லாம்... முதலாளி....முகம் திருப்பி வேறு பேசினார்.

பின் ஒரு நாளில் "இல்ல மாரியப்பன்.... உன்னால கட்ட முடியாதுன்னு சொல்றாங்க...." என்று முகத்தில் அறைந்த மாதிரி சொன்னார்.

கோடியில் புரளும் முதலாளி அறுபதாயிரத்துக்கு என்னை நம்பாமல் விட்டிருக்க கூடாது. அழுகையை அடக்க அடக்க.. ஆத்திரத்தின் சாயம் வெளுக்க ஆரம்பித்தது.

"பைக் வாங்கிட்டா ஓவரா ஆகிடுவான். மாரியப்பன்லாம் பைக் வாங்கினா அது எப்டி...? நம்ம பைக் நிறுத்தற இடத்துல வந்து நிறுத்துவான்.... எப்டி சார்....!"

அவர்களாகவே பேசிக் கொண்டது எப்படியும் என் காதுக்கு வந்து விட்டது. அலுவலக சுவருக்கு காதும் இருக்கிறது. வாயும் இருக்கிறது. நான் நம்புகிறேன். என்னைப் போன்றவன் ஒரு பைக் வாங்குவதைக் கூட இந்த சமூகம் அனுமதிக்க மாட்டேன் என்கிறது. நான் காலம் முழுக்க என் மேலதிகாரியோடு லிப் கேட்டே சுங்கத்தில் இறங்க வேண்டும். அதில் ஒரு அவஸ்தை சுகம் அவர்களுக்கு. காலில்லாமல் எத்தனையோ பேர் இருக்கிற போது உனக்கு கால்கள் இருக்கிறதே என்ற ஈர வெங்காய வசனத்தை தூக்கிக் கொண்டு யாராவது முன்னால் வந்தால் எட்டி மிதிப்பதைத் தவிர எனக்கு வழி தெரியவில்லை.

அத்தனை பெரிய மனதை நான் வளர்த்துக் கொள்ள இந்த சமூகம் என்னை விட்டதேயில்லை. நான் கற்றதெலாம் இங்கிருந்து தான். நான் கண்டதெல்லாம் இங்கிருப்பதைத்தான். வால் அறுந்த பல்லி காண்பவருக்கு வேண்டுமானால் வினோதமாக வியப்பாக இருக்கலாம். அதற்கு சுவற்றில் பற்ற ஒரு பிடி இல்லை என்பது தானே நிஜம். என்னைப் போன்றோரின் நிஜங்கள் வழியே முதலாளிகள் ஒருபோதும் சிந்திப்பதில்லை என்பது தான் ஏகாதிபத்தியம்.

சற்று முன் நான் ஒரு கொலை செய்து விட்டு தான் வந்திருக்கிறேன். அதுபற்றி சொல்ல வந்ததால் தான் எல்லாவற்றையும் சொல்ல வேண்டி இருக்கிறது.

மூன்று குடித்த இளைஞர்கள்.... தாறுமாறாக நடந்து வருகையிலேயே நான் நினைத்தேன். நினைத்த கணமே அது நடந்தது. மூவரில் ஒருவன் ஒரு காலை தூக்கி தூக்கி யாரையோ உதைப்பது போல காற்றில் பாவனை செய்து கொண்டே வந்தான். உடன் வந்த இருவர் கையை காட்டி காட்டி புணர்தலைப் பற்றிய கோட்டோவியத்தை காற்றில் வரைந்து கொண்டே வந்தார்கள். பேருந்து நிறுத்தத்தில் இருக்கும் சிலருக்கு முகம் சுழிக்கத்தான் தெரிந்தது. சிலருக்கு முகம் திருப்பத்தான் தெரிந்தது.

காலைத் தூக்கிக் கொண்டே வந்தவன் சரியாக பள பளவென சிரித்துக் கொண்டு நின்றிருந்த என் புது பைக்கில் மாற்றி மாற்றி உதைத்தான். எதற்கு என்று உடனே தெரிந்து கொள்ள முடியவில்லை. உதை அதிகமாக அதிகமாக தெரிந்தது. அவனுக்கு காதல் தோல்வியாம். உடன் இருந்தவன் சமாதானப் படுத்தினான். காதல் தோல்விக்கு சாலையோரம் நிற்கும் புது பைக்கை உதைப்பார்களா...! யோசிக்க கூட முடியவில்லை. நான் ஓடிச்சென்று, " அயோ.. ஹேய்.. வேண்டா.. ஹலோ பிரதர்... புது பைக்கு..." சொல்ல சொல்லவே....

"எங்க ஏழியால வந்து எல்லேய்யே ப்ரராதார்னு கூப்ப்பியா....." என்று என் கழுத்தைப் பிடித்து தள்ளினான். நான் பூச்சி சைஸ் தான். என்னால் அவர்களை எதிர்த்து அடிக்கவெல்லாம் முடியாது. எதை நொந்து கொள்வது என்றே தெரியவில்லை. கத்தி எடுத்து அவனை குத்தி விடும் கோபம் எனக்குள் சீறிக் கொண்டு வந்தது. எதற்கும் இயலாத கோபத்தால் கழுத்தை சுற்றியும் வலி. அதன் பின்னால் ஒரு பேரழுகை முட்டிக் கொண்டு நின்றது. ஒரு வழியாக அவர்கள் காலைத் தூக்கிக் கொண்டே காதல் தோல்வியை திட்டியபடியே நகர்ந்து விட... முப்பது முறை கிக்கர் அடித்த பின் ஸ்டார்ட் ஆன இண்டிகேட்டர் உடைந்த பைக்கை நகர்த்தி நகர்த்தி எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி நகர்ந்தேன். அப்போதும் என்னை சுற்றி நின்ற பிணக்கூட்டம் பார்த்தும் பார்க்காத மாதிரி தான் இருந்தது. இரண்டு இளம் பிணங்கள் மட்டும் மறைத்து மறைத்து வீடியோ எடுத்துக் கொண்டிருந்தது.

விதி யாரை விட்டது. அல்லது விதியை யார் விட்டது.

கணுவாய் தாண்டி மண் சாலையில் என் வீட்டுக்கு அருகே செல்கையில் எனக்கு பின்னால் 'டமார்...... படீர்..... அயோ... ஓ... ஆ... ஓ....' என சத்தம். நின்று வண்டியில் அமர்ந்தே திரும்பி பார்த்தேன். ஒரு லாரி எதன் மீதோ ஏறி இறங்கி சிட்டாய் பறந்து போய்க் கொண்டிருந்தது. ஒரு மாதிரி புரிந்து கொண்டு வண்டியை திருப்பி அந்த இடத்துக்கு சென்றேன். பைக் நசுங்கி கால் நசுங்கிய ஒருவன்

கையை தூக்கி தூக்கி 'காப்பாத்து காப்பாத்து' என்று முனங்கியபடி கதறிக் கொண்டிருந்தான். முன் பின் சாலையில் யாருமே இல்லை. வேகமாய் வண்டியை ஓரமாய் நிறுத்தி விட்டு இன்னும் அருகே சென்று பார்த்தேன். சிவப்பில் இருந்த முகம் கருப்பு வெள்ளையில் என் மூளைக்குள்ளிருந்து கண்களுக்கு இப்போது மாறி தெளிவாக உணர முடிந்தது.

என் வண்டியை ஒருவன் உதைக்கும் போது அது பற்றிய சுயமே இல்லாமல் அருகில் இருந்த டாஸ்மாக் சந்தில் நின்று குடித்துக் கொண்டிருந்தவன் தான் இவன். பக்கத்தில் நின்று ஆற அமர அவன் முகத்தைப் பார்த்தேன். குரூரம் என் கண்களில் வழியே பெருமூச்சு விட்டது. கெஞ்சி கெஞ்சி அவன் தலை தொங்கும்வரை அங்கேயே நின்று கண்கள் புடைக்க உள்ளே எதுவோ வெடிக்க பார்த்தேன். அது ஆசுவாசமும் இல்லை... அவசரமும் இல்லை... மரமற்ற ஞாபகம் போல நிழலுக்கு வாய்த்த கோபத்தைப் போல.

கூட்டம் கூட ஆரம்பிக்க மெல்ல கூட்டத்தில் கலந்து காணாமல் போனேன்.

நான் நினைச்சிருந்தா காப்பாத்தி இருக்கலாம். ஆனா எனக்கு காப்பாத்த தோணல. உங்கள்ல நல்லவங்க இப்போ என்னை வில்லனா கூட பார்ப்பீங்க. திட்டி தீர்ப்பீங்க. மூணு வருஷம் கொஞ்சம் கொஞ்சமாக காசு சேர்த்து... சுயமா வாங்கின பைக்கை காரணமே இல்லாம, அவன் குடிச்சிருக்காங்கிறதுக்காக உதைக்கறவன் எல்லாம் சாகலாம். சரி உதைச்சவன் அவன். செத்தவன் இவன்னு சொல்லலாம். குடிகாரன்ல செத்தவன் என்ன உதைச்சவன் என்ன...?

முதல் முறையாக என் அப்பா மீது கோபம் வந்தது. ஏனென்று தெரியவில்லை.

–

**கவிஜி**



# சந்திப்புகள்

எட்டிப்பிடிக்கும் சாலை நெரிசலில்
ஒரு நொடி
ஒன்றுமில்லாமல் ஆனேன்..,

சாலையைக் கடக்கும்
வழி புரியாமல் திகைத்து நின்ற வினாடிகளுக்குள்ளாக.,

எங்கிருந்தோ வந்த இரு கைகள்
என் கைகளைப் பற்றிக் கொண்டு கடத்திய
தோரணையில் மனிதம் விரிந்து விழிமுன் தோன்றியது..!

சிறு இடைவெளிக்குள்ளாக
அக்கைகள் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஓட,
அந்த அரசு மருத்துவமனை அழைக்கிறது
அப்பெண்ணை..! என்னிடம் வினாவையும் சில
அன்பையும் விதைத்துவிட்டு
இன்று நினைவுகளில்
உயிர்ப்பித்துக் கொண்டிருப்பதுதான் சந்திப்புகளின்
விதி!!!

–

கவிமலர் த.சரண்யா,
கருமண், கொழிஞ்சாம்பாறை
பாலக்காடு மாவட்டம்.

# ஏர்ப் பிடித்து

உழுதிடும் கரங்கள்...
ஏழிசைக் கீதமும்
விரும்பும் வரங்கள்...!

சேற்றைக் கலக்கும்
கறுப்புக் கால்கள்...
சோற்றைக் கொடுக்கும்
புண்ணியக் கோல்கள்...!

நாற்றைப் பறிக்கும்
நாடி நரம்புகள்...
நாட்டைக் காக்கும்
நாணய வரம்புகள்...!

களைகளைப் பிடுங்கும்
சுருங்கிய விரல்கள்...
கண்ணீரைத் துடைக்கும்
கம்பீரத் திரள்கள்...!

உருமாலை கட்டிய
உழவனின் தலைகள்...
உத்தமம் புரியும்
உன்னதக் கலைகள்...!

வயலில் சிதறும்
வியர்வைத் துளிகள்...
வருங்கால மக்களைச்
செதுக்கும் உளிகள்...!

உச்சி வெயிலிலும்
உழைக்கும் உடல்கள்...
உலகின் பசியைப்
போக்கும் கடல்கள்...!

உழவுத் தொழிலைச்
செய்யும் மனிதர்கள்...
உண்மையில் இங்கு
வாழும் புனிதர்கள்...!

–
பாக்யபாரதி,
தகடூர்.



# 1.
# வறுமையில் உழவர்

வாசலில் வண்ண கோலங்கள்
பொங்கல் கனவில்!

2.
மின்சாரத் தூண்டில்
மீன்பிடிக்கும் இயந்திரங்கள்
இளமையில் கணினி.

3.
மலரும் நாட்களில்
தெய்வத்திற்கு நீர் ஊற்றுகிறார்
தாகத்துடன் மரங்கள்.

4.
மன்னிக்க முடியாது
மனிதர்களின் குணத்தை
கனிமவள சுரண்டல்.

5.
மூக்கு இருந்தும்
சுவாசிக்க முடியவில்லை
வாடும் பயிர்கள்.

6.
புத்தகத்தில் நெருப்பு
வாசகர்களுக்கு பொறுப்பு
பாரதியார் கவிதை!

7.
வானில் வட்டங்கள்
வண்ணத்தில் உருமாற்றம்
கழுத்தறுக்கும் காலம்.

8.
காற்றில் வெப்பம்
உறைந்து கிடக்கும் சூரியன்,
அறிவியல் புனைவு!

9.
மீண்டும் புரட்சி
மிச்சங்களின் ஓர் எழுச்சி
மற்றொரு ஊரடங்கு.

10.
கடலுக்குள் கடவுள்
காணமற்போன மனிதர்கள்
மீட்டெடுக்கும் சுனாமி.

கவிஞர்:
வெ.ஹேமந்த் குமார்,
ஈரோடு.



# காதல்

அலைபேசியில் தொடங்கி
என் முதல் முத்தம்
இதழ் சத்தமற்று
மௌனங்களில் அழகாய்
சிறு கால உரையாடல்
சந்திப்பில் அழைத்திடுமே
சந்தித்த வேளையில்
என்னை சிந்திக்க மறந்தென்வோ
என் வாழ்விலும்
காதல் எனும் கவிதை
என் வாழ்விலும் கிறுக்களாகிறதே!

கண்டதும் காதல்
பூக்க தொடங்கிவிட்டது
வாசம் அற்று பின்
வாசம் தரித்துவிட்டது
இப்போது வாழ காத்திருக்கிறது
காலம் தீர்வதற்குள்!

நீ நான் என்பதில்
நிறைவுறாது நம் காதல்
நாம் எனும் சொல்லின்
இறுதியில் முழுமையாகி
வாழ்ந்து கொண்டு இருப்பதே
நமக்கான காதல்!

–
கனிமொழி சீனிவாசன்



இரா.மதுவர்ஷினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்

# வாழ்க்கை....

அனுபவங்களை
அணுஅணுவாய் ருசிக்க வைத்து
ஆனந்தத்தை ஆணிவேராய் உணர வைத்து
இனிமையினை இதயத்தினில் கலந்து
ஈகையினை மனிதத்தில் விதைத்து
உயரத்தில் பறக்க ஆசை கொண்டு - அதற்கு
ஊக்கமுற சிறந்த பாதை தந்து
எளிமையோ செழிமையோ அதிலும்
ஏற்றமிகு வளர்ச்சி கண்டு
ஐயமென்றால் என்னவென்று அறியாது
ஒற்றுமையென்னும்
உரிமையை
ஓருயிராய்
உணர வைத்ததே
இவ்வாழ்க்கை.....

அன்புடன்......
ச. அருள் பிரசாத், B.Com, CMA, MDA, DTL,
(GST Practitioner)
சிராங்குடி.



# வள்ளலாரின் வெளிவிரிவு கோட்பாடு

தொன்றுதொட்டு வானியல் அறிவியலில் முன்னேறி இருந்த இனம் தமிழினம்! வள்ளலாரின் வானியல் கருத்துகள் வியக்க வைக்கின்றன. இயற்கையின் இயங்கியலை தமிழர்கள் அறிந்தது போல வேறெந்த இனமும் இவ்வளவு நுட்பமாக அறிந்திருக்குமா என்பது ஆய்வுக்குரியது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் வானியல் அறிஞர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

“செஞ்ஞாயிற்றுச்செலவும்
அஞ்ஞாயிற்றுபரிப்பும்
பரிப்புச்சூழ்ந்தமண்டிலமும்
வளி திரிதருதிசையும்,
வறிதுநிலைஇய காயமும், என்றிவை...”

என்று புறநானூற்றில் உறையூர் சாத்தனார் பாடியுள்ளார்.

மன்னன் நலங்கிள்ளி இயல்பைக் குறிப்பதற்கான இப்பாடலில் வானியல் செய்தியையும் புலவர் எடுத்துரைக்கிறார்.

இதன் பொருள் கதிரவனின் இயக்கப்பாதையும் அதன் ஈர்ப்பும் காற்றின் விசை திசையும் எவ்விதத் தாங்குதலும் இல்லாமல் தொங்கும் ஆகாயத்தையும் நேரில் சென்று அளந்து அறிந்த வந்தது போல் கணிக்கும் வானியலாளர்கள் என்று குறிப்பிடுவது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாம் வானியல் அறிவின் உச்சத்தில் இருந்திருக்கிறோம் என்பதைப் பறை சாற்றுகிறது.

“வளிதிரிதருதிசை” என்றால் காற்று இல்லாத அண்டப்பெருவெளி என்று பொருள். காற்று இல்லாத ஒரு வெளி இருப்பதை அன்றே கூறுகின்றனர்.

பொருளையும் ஆற்றலையும் ஆக்கவோ, அழிக்கவோ முடியாது என்று மேற்கத்திய அறிவியல் உலகம் 18 - 19 ஆம் நூற்றாண்டுகளில் எடுத்துக் கூறியது. ஓர் ஆற்றல் இன்னொரு ஆற்றலாக வடிவ மாற்றம் பெறுமே தவிர அழியாது. எடுத்துக்காட்டாக, வெப்ப ஆற்றல் மின்சார ஆற்றலாக மாறலாம். மின் ஆற்றல் ஒளி ஆற்றலாக மாறலாம். ஆனால், இவற்றின் கூட்டுத்தொகை மாறாது. இதுவே ஆற்றலின் அழியா விதி.

இதனை ‘இல்லது தோன்றாது, உள்ளது மறையாது” என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தனர் நம் தமிழர்கள்.

உலகம் உருண்டை என்பதை மேற்குலகம் கண்டறிந்து கூறியதே 16-ஆம் நூற்றாண்டில் தான். ஆனால் நாம் அதற்கு முன்பே கண்டறிந்து விட்டோம். அவற்றிற்கான குறிப்புகள் தமிழ் இலக்கியங்கள் எங்கிலும் காண முடியும்.

“அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெடுப் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன”

என்ற திருவாசகத்தின் திருவண்டப்பகுதியில் இவ்வரிகள் வானியல் (அஸ்ட்ரானமி) என்ற அடிப்படையில் உலகம் உருண்டை, வான் பொருட்கள் யாவும் உருண்டை வடிவில் உள்ளன, அண்டம் விரிவடைகிறது என்ற அறிவியல் செய்திகளைக் கூறுகிறது.

இவ்வாறான வானியல் குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிறைந்திருந்தாலும் அவற்றை ஒருங்கிணைத்து தனக்கான செய்திகளை உள்ளடக்கி, தமிழர் வானியல் அறிவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றவர் வள்ளலார்.

வள்ளலாரின் அருட்பெருஞ்சோதி அகவல் பகுதி என்பது உலகத் தோற்றம், உயிர்த் தோற்றம் மற்றும் இயல்பு, ஐம்பெரும் ஆற்றல் தோற்றம். அண்டவியல், இயற்கை அமைப்பு, அதன் தன்மை மற்றும் செயல்பாடுகள், இப்படி பிரபஞ்சம் தொடக்கம் முதல் முடிவு வரை உள்ள அனைத்தையும் குறிப்பிட்டப்பட்டுள்ள ஒரு அறிவியல் அடிப்படை நூல் ஆகும்.

இவற்றில் தான் வானியல் குறிப்புகள் குவிந்து கிடக்கின்றன. ‘உலகம் எப்போது தோன்றியது?’ என்ற கேள்விக்கு பெருவெடிப்புக் கோட்பாட்டின் வாயிலாக அறிவியல் பதில் தருகிறது. பேரண்ட மூலத்தில் ஏற்பட்ட பெரு அழுத்தம் காரணமாக ஒரு பெரு வெடிப்பு நிகழ்ந்தது, அவற்றிலிருந்து இப்பிரபஞ்சம் விரிந்தது என்பதாகும்.

ஒன்றிலிருந்தே இந்த பிரபஞ்சம் உருவானது என்ற அறிவியல் உண்மையை நம் இலக்கியங்கள் கூறியிருந்தாலும் அவற்றை வள்ளலாரும் குறிப்பிடுகிறார்.

வெளியிடை ஒன்றே விரித்துஅதில் பற்பல
அளி உற வகுத்த அருட்பெருஞ்சோதி (253)

வெளி என்பது ஒன்றுதான், அவை பலவாக விரிந்தது என்ற உண்மையை இப்பாடல் வாயிலாக கூறுகிறார்.

மேலும்,

வெளியிடை பலவே விரித்து அதில் பற்பல
அளிதர அமைந்த அருட்பெருஞ்சோதி (254)

இவ்வாறான வெளி பல வெளியாக பிரிந்து அதில் அண்டங்கள், பேரண்டங்கள், கோள்கள், விண்மீன்கள், ஐம்பெரும் ஆற்றல்கள், இன்னும் வான்பொருட்கள் தோன்றி விரிந்தன என்கிறார்.

வெளியிடை உயிர் இயல் வித்தியல் சித்தியல்
அளிபெற அமைத்த அருட்பெருஞ்சோதி (255)

வெளியில் உயிர்களைப் படைத்தும் அவை வாழ்வதற்கான இயல்புகளையும் இவ்வுயிர்களுக்கான பேராற்றலும் சில அதிசய ஆற்றலையும் (சித்தர்கள், ஞானிகள் உணரக்கூடிய சித்தியல் ஆற்றல்) இவ்வெளியில் இருக்கிறது என்கிறார் வள்ளலார்.

அண்டமும் அதன் மேல் அண்டமும் அவற்றுள்
பண்டமும் காட்டிய பரம்பர மணியே (646)

அண்டங்களையும் அவற்றின் மேல் அடுக்காக உள்ள பிற அண்டங்களையும் அவற்றில் உள்ள கோள்கள், அசையும் அசையா பொருட்கள் உள்ளிட்ட வான் பொருட்கள் இருக்கின்றன என்கிறார் வள்ளலார்.

”இவ்வெளி எல்லாம் இலங்க அண்டங்கள்
அவ்வயின் அமைத்த அருட்பெருஞ்சோதி” (290)

என்ற வரியின் மூலம் இப்பரந்த வெளிகளில் ஒவ்வொன்றிலும் பற்பல அண்டங்களும் உள்ளடக்கி இருக்கிறது என்ற செய்தியை குறிப்பிடுகிறார்.

வெளியிடைப் பகுதியின் விரிவியல் அணைவியல்
அளிஉற அமைத்த அருட்பெருஞ்சோதி (247)

வெளியின் இரு ஆற்றலைப் பற்றி கூறுகிறார். ஒன்று வெளி விரிந்துக்கொண்டு போகும் விரிவாற்றலையும் இரண்டாவதாக மீண்டும் தன்னில் இழுத்து அணைத்துக் கொள்ளும் அணைவியல் ஆற்றலையும் குறிப்பிடுகிறார்.

வள்ளலார் குறிப்பிடும் இந்த அணைவியல் என்ற ஆற்றல் தான் இன்றைய நவீன பிரபஞ்சத்தின் உச்சபட்ச அறிவாக நவீன அறிவியலாளர் கருதுகிறார்கள். அவர்களின் ஆய்வுகளைப் பற்றி தெரிந்து கொண்டால் தான் வள்ளலாரின் வானியல் சிந்தனை எவ்வளவு வியப்பானது என்பது தெரியும்.

1300 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பேரண்ட மூலத்தில் பெரும் அழுத்தத்தினால் ஏற்பட்ட பெருவெடிப்பில் விரியத் தொடங்கிய இப்பேரண்டத்தின் விரிவு அதன் பிறகும் விரிந்து கொண்டே இருக்கிறது என்ற உண்மையை 1920 ஆம் ஆண்டு பெல்ஜிய வானியல் அறிஞர் ஜார்ஜிஸ் லெமெய்டர் (Georges Lamaitre) கண்டறிந்து கூறினார். இன்னொரு வியப்பு என்ன வென்றால் இவ்விரிவு வேகம் இன்னமும் குறையவில்லை என்பதுதான். மேலும் இதே கால கட்டத்தில் அமெரிக்க வானியலாளர் எட்வின் ஹப்பிள் (Edwin Hubble) பூமியிலிருந்து பல்லாயிரக்கணக்கான கி.மீ. தொலைவில் இருக்கும் விண்மீன் கூட்டங்கள் மிக விரைவாக விலகிச் சென்றன என்றார்.

இப்படி விரிந்து கொண்டே செல்லும் போது ஒரு சமயத்தில் தன் விரிவை நிறுத்திக்கொண்டால் அதன் எதிர்வினையாக உள்ளிழுக்கும் ஆற்றலை அவை பெறக் கூடும். அவ்வாறான உள்ளிழுக்கும் பட்சத்தில் பரந்த விரிந்த இப்பேரண்டம் தான் தொடங்கிய புள்ளியிலே சுருங்கி அடங்கிவிடும். அதனை "பெருஞ் சுருக்கம்" (Big Crunch) என்று அழைக் கிறார்கள். பிரபஞ்ச விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கின் இதனை ஒற்றைத்திரட்சி (Singularity) என்பார்.

இச்சுருக்க விதி கருந்துளைக் (Black hole) கோட்பாடுகளுடன் பொருத்தி நிறுவப்படுகிறது. கருந்துளை என்பது மிகச்சிறிய இடத்தில் அதிகமாக அடக்கி வைக்கப்பட்ட பல பொருட்களின் தொகுப்பாகும். இத்துகள் சுற்றியுள்ள அனைத்தையும் தன்னுள் ஈர்த்து அடக்கிக் கொள்ளும் பேராற்றலைப் பெற்றது.

இவற்றிலிருந்து பிரபஞ்சத்தில் இருக்கும் நட்சத் திரங்கள், கோள்கள், பால்வெளி மண்டலம் போல உள்ள எண்ணற்ற மண்டலங்கள் உள்ளிட்ட எதுவும் தப்பிக்க இயலாது; ஏன் ஒளியும்கூட தப்பிக்க இயலாது. மேலும் ஈர்க்கப்படும் ஒளி திரும்ப வர முடியாதபடி இந்த ஈர்ப்பு விசை தன்னுள் அடக்கிக் கொள்ளும், பிரபஞ்சம் அழிவு என்ற ஒன்றை சந்தித்தால் எல்லாமும் ஒரு புள்ளிக்குள் ஈர்க்கப்பட்டுவிடும்

என்று அறிவியலாளர்கள் கூறு கிறார்கள்.
இவ்வாறான பிரபஞ்சத்தின் உச்சபட்ச அறிவியல் கோட்பாடான பெருஞ்சுருக்கம் மற்றும் கருந்துளைக் கோட்பாடுகளை மிக எளிமையாக அணைவியல் என்று போகிற போக்கில் குறிப்பிடும் வள்ளலாரின் பிரபஞ்ச அறிவு நம்மை வியக்கக் வைக்கிறது.

மேற்கண்ட அண்டவியல் விரிவியலில் விரிந்து போகிறது என்பதை நாம் அறிந்தோம். ஆனால் அது எப்படி, எந்த முறையில் விரிகிறது என்பதை இன்னமும் யாரும் விளக்கவில்லை. இவற்றை வள்ளலார் விரிவாக விளக்குகிறார். ஒரு சூத்திரம் போல் கூறுகிறார். அதாவது புதிய பொருள்கள் எப்படி பிறக்கிறது என்பதை விளக்குகிறார்.

ஒரு பொருளில் அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என்ற நான்கு நிலைகள் இருப்பதைக் குறிப்பிடும் வள்ளலார் அவை ஒவ்வொன்றிலும் உட்கூறுகளாக அடி, முடி, கடை என்ற நிலை இருப்பதாக விளக்குகிறார். இந்த நிலைகள் ஒன்றுக்கொன்று இணைதல் மூலம் புதிய பொருள் உருவாகிறது என்கிறார்.

எல்லா விதமான கணக்குகளுக்கும் 0 (சுழியம்) முதல் 9 வரை உள்ள எண்கள் அடிப்படை. இவற்றை கொண்டே பத்தாயிரம், இலட்சம், பத்து இலட்சம், கோடி, பத்துக் கோடி, பில்லியன், மில்லியன், டிரில்லியன் உள்ளிட்ட பெரும் மதிப்புகளும் எண்ணிக்கையும் உருவாகின்றன. அதாவது சிறிய எண்களே பெரும் மதிப்பு எண்களுக்கு அடிப்படை என்பதாகும். கணித மேதைகள் பலர் உலக விரிவு - கணித அடிப்படையிலேயே விரிகிறது என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதைப் போலத் தான் உலகில் எல்லா விதமான பொருள்களும் மேற்கண்ட வள்ளலார் குறிப்பிடும் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் அதில் உட்கூறுகளான அடி, முடி, கடை போன்றவற்றின் சேர்க்கையில் தான் தோன்றுகிறது என்பதையும் இவையே பொருள் பிறப்பதற்கான காரணம் என்கிறார் வள்ளலார்.

இவற்றை வேறு பாடலில் இச்சூத்திரத்தை பொருத்தி பாடியுள்ளார்.

ஆரியல் அகம்புறம் அகப்புறம் புறப்புறம்
ஆரமுது எனக்கருள் அருட்பெருஞ்சோதி (141)

ஆர் என்றால் ஒளி என்பதாகும். ஆரியல் என்றால் ஒளியியல் என்று பொருள். அதாவது ஒளியில் அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என்ற நான்கு நிலை இருப்பதைக் குறிப்பிடுகிறார்.

மேலும்,
அண்டப்புறப்புற அமுதம் பொழிந்து உயிர்
அண்டுறக் காத்தருள் அருட்பெருஞ்சோதி *(374)*

இப்பாடலில் அண்டத்தின் புறப்புற பகுதி மழை என்று குறிப்பிடுவதை கவனிக்கலாம். அமுதம் என்றால் மழையைக் குறிக்கும்.

இவ்விரிவுக் கோட்பாடு அண்டவியலுக்கும் பிண்ட வியலுக்கும் உள்ளிட்ட எல்லா பொருட்களுக்கும் பொருந்தும்.

இவ்விரிவியல் கோட்பாடுகளை இவ்வளவு துல்லிய மாக வள்ளலாரை தவிர வேறு யாரும் இதுவரையிலும் சொல்லவில்லை. வள்ளலாரின் வெளிவிரிவியல் சூத்திரம் நம்மை இன்னும் வியப்பில் ஆழ்த்துகிறது. இவற்றை நாம் இன்னமும் ஆராயவில்லை, இனிமேலாவது அவற்றை ஆராய்ந்து உலகத்திற்கு அறிய வைக்க வேண்டியது நம் கடமையாகும்.

ஐம்பெரும் ஆற்றல் தோற்றத்தையும் வள்ளலார் போகிற போக்கில் குறிப்பிடுகிறார்.

வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும்
ஆனற வகுத்த அருட்பெருஞ்சோதி *(273)*

நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த அருட்பெருஞ்சோதி *(274)*

வான்வெளியிலிருந்து காற்றும் காற்றிலிருந்து நெருப்பும் தோன்றின என்கிறார் வள்ளலார். தீயிலிருந்து நீரும் நீரினால் நிலமும் தோன்றியதை குறிப்பிடுகிறார்.

நீர்மேல் நெருப்பும் நெருப்பின் மேல் உயிர்ப்பும்
ஆர் உற வகுத்த அருட்பெருஞ்சோதி *(275)*

நீரின் மேல் நெருப்பும் அந்த நெருப்பின் மேல் உயிர்ப்பும் இருக்கிறது என்கிறார்.

நீரின் வெப்பநிலை குறையும்போது உறைபனியாகவும் சராசரி வெப்பநிலையில் இயல்பான நீராகவும் மேலும் அதீத வெப்ப நிலையில் ஆவியாகவும் வெப்ப நிலையைப் பொருத்து மாறுகிறது.

மேலும் நெருப்பில் உயிர்ப்பு இருப்பதாகக் குறிப்பிடுகிறார். நெருப்பிற்கு இரு இயல்புகள் உண்டு ஒன்று வெளிச்சம், இரண்டாவது வெப்பம். வெளிச்சத்தைப்

பார்க்கலாம், வெப்பத்தைக் காண இயலாது, ஆனால் உணர முடியும் இவ்வாறு காண இயலாத வெப்ப ஆற்றலே உயிர்களை இயக்குகிறது. வெப்பம் இல்லாத பொருட்கள் இல்லை, அதுவும் உயிர் உள்ள பொருட்கள் அனைத்திலும் வெப்பம் இருக்கும், வெப்பம் இல்லாமல் இருந்தால் அவை உயிருடன் இல்லை என்ற பொருள்.

வெப்பம் இல்லாத உடல் பிணமாகும். மனித விந்தில் வெப்ப நிலை குறைந்தால் அவ்விந்து உயிராற்றல் இழந்து குழந்தையின்மை ஏற்படலாம் என மருத்துவ அறிவியலாளர்கள் கூறுவது குறிப்பிட்டதக்கது. இவற்றையே நெருப்பின் மேல் உயிர்ப்பும் என்று குறிப்பிடுகிறார் வள்ளலார்.

இப்பிரபஞ்ச வெளியில் பரந்து விரிந்திருக்கிற அண்டங்கள் நிறைந்துள்ளன. இவ்வாறு விரிந்திருக்கிற வெளிகளையும் அவற்றின் அமைப்பையும் வள்ளலார் விவரிக்கிறார்.

வெளிவகை விரிவுப் பகுதியில் பலவகை வெளிகளை வகைப்படுத்துகிறார். அவை பூதவெளி, உயிர்வெளி, பகுதி வெளி, கலைவெளி, சுத்தநல்வெளி, பரவெளி, பரம்பர வெளி, பராபர வெளி, பெருவெளி, பெருஞ்சுக வெளி போன்ற வெளிகள் இருப்பதாக விளக்கிச் செல்கிறார்.

இவ்வாறான வெளிகளில் ஒலி நிறைந்திருக்கிறது என்ற அறிவியல் செய்தியை,

வெளியினில் ஒலி நிறைவியன் நிலை அனைத்தும்
அளியுற அமைத்த அருட்பெருஞ்சோதி (249)

வெளி எங்கிலும் ஒலி பரவி இருக்கிறது, அவற்றோடும் விரிவடைகிறது என்று கூறுகிறார்.

மேலும் கணக்கிட முடியாத இப்பிரபஞ்சத்தை ஆராய்வதற்கும் காண்பதற்கும் வழியை அறிவியல் முறையில் வள்ளலார் கீழ்க்காணும் பாடலில் தெரியப்படுத்துகிறார்.

அண்டகோடிகள் எலாம் அரைக்கணத்து ஏகிக்
கண்டுகொண்டிட ஒளிர் கல நிறை மணியே (651)

கோடிக்கணக்கான அண்டங்களை அரை நொடியில் சென்று அங்குள்ள பண்டங்களை (பொருட்களை) கண்டு கொள்ள ஒளியை படைத்த மணியே என்கிறார்.

அதாவது ஒளியே மிக அதிவேகமாக பயணிக்கக்கூடிய ஊடு என்கின்ற அறிவியல் செய்தியை கூறுகிறார். இன்றைய நவீன அறிவியல் கூறும் செய்தியை வள்ளலார் உணர்ந்து கூறி இருக்கிறார், நாம் காணும் ஒவ்வொரு பொருளும் நம் கண்ணுக்கு தெரிகிறது என்றால் ஒளி தான் காரணம். பொருள் மீது ஒளி பட்டு எதிரொளிக்கும் போது ஒரு பொருள் நமக்கு தெரிகிறது என்பது அறிவியல் உண்மை.

வெற்றிடத்தில் ஒளி வேகம் விநாடிக்கு 299,792,458 மீட்டர்களாகும். ஒளியின் வேகம் ஒரு மாறிலி (constant) ஆகும்.

ஐன்ஸ்டைனின் சார்பியல் கோட்பாட்டின்படி ஒளியின் திசைவேகம் தான் இப்பிரபஞ்சத்தின் வேக எல்லையாகும். ஒளி என்பது போட்டான் (photons) எனும் நிறை இல்லாத ஒரு துகள் ஆகும். இத்துகள்கள் புவியீர்ப்பு விசைக்கு கட்டுபடாததால் ஒளியின் திசைவேகம் தான் இப்பிரபஞ்சத்தின் வேக எல்லை என ஐன்ஸ்டின் கூறியுள்ளார்.

இதுவரை நாம் கண்டது அருட்பெருஞ்சோதி அகவலில் ஒரு சில பாடல்களை மட்டுமே. இதில் மொத்தம் 798 இரண்டடி செய்யுள் பாடல்கள் உள்ளன. அதில் இருக்கும் அனைத்து பாடல்களும் அறிவியல் செய்திகளை நிரப்பி இருக்கின்றன. இதில் கற்பனை, கட்டுக்கதைகள், புனைவு, புகழ் பாடுதல் உள்ளிட்ட எதுவும் இல்லை என்பது மேலும் சிறப்பிற்குரியது.

ஆனால் இவ்வளவு அறிவுக்களஞ்சியமாக இருக்கக் கூடிய வள்ளலாரின் பெருமிதங்கள் வெளியுலகத்திற்குத் தெரியாமல் போனது எப்படி என்பது பெரும் வருத்தத்தைத் தருகிறது.

ஈராயிரம் ஆண்டுகளாக நிலவி வந்த தமிழர் அறிவியல், பண்பாடு உள்ளிட்டவற்றை பகுத்தறிவு என்ற பெயரில் நம் மக்களைக் கற்க விடாமல் செய்துவிட்டனர்.

தமிழ் காட்டுமிராண்டி மொழி, அவற்றில் ஒன்று மில்லை எல்லாம் மூட நம்பிக்கைகள் நிறைந்துள்ளது. அவற்றைப் புறக்கணியுங்கள், வீட்டில் மனைவியிடம், வேலைக்காரப் பெண்களிடம் ஆங்கிலத்தில் பேசுங்கள் என்று கூறப்பட்டது. இவ்வாறு நம்மின அறிவை மண் போட்டு மூடியது பகுத்தறிவுப் பகலவர் கூட்டம்!

முற்போக்கு, பகுத்தறிவு போன்ற சொற்களில் நம் தமிழினத்தின் அறிவை மறைத்து விட்டார்கள். தமிழில் ஒன்றுமில்லை - தமிழ் இலக்கியங்களில் ஒன்றுமில்லை, என்ற எவ்வித ஆய்வும் செய்யாமல் வாய்க்கு வந்ததெல்லாம் சொல்லி தமிழினத்தை

தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாக்கி விட்டனர்.

இவ்வாறான தாழ்வு மனநிலையிலிருந்து நம்மினத்தை விடுவிக்க வந்தவரே வள்ளலார்.

தமிழரின் பண்பியல், வாழ்வியல், வானியல், மெய்யியல், தத்துவவியல், உயிர் நேயப் பண்பாடு, சாதி ஒழிப்பு, ஆண் - பெண் சமத்துவம், உருவ வழிபாடு மறுப்பு உள்ளிட்ட எல்லாக் கூறுகளையும் வெளிக் கொணர்ந்தவர் வள்ளலார். தமிழினம் மிகச்சிறந்த வானியலாளர் மரபு கொண்டது என்பதைத் தம் அகவல் கொண்டு நிறுவியவர் வள்ளலார்.

வள்ளலாரின் வானியல் கோட்பாடுகள் இன்னமும் நுட்பமாக ஆராயப்பட வேண்டும், அவ்வாறு ஆராயப்பட்ட கோட்பாடுகளைக் கல்விக் கூடங்களில் பாடமாக்க வேண்டும்.

மேலும் தமிழ்நாடு அரசு கல்விக்கூடங்களில் “அறிவியல் தமிழ்” என்ற பாடத்தை மறு சீரமைத்து தமிழ் இலக்கியங்களில் இருக்கும் விஞ்ஞானம், வானியல் உள்ளிட்ட பல அறிவியல் செய்திகளை தொகுத்து “அறிவியல் தமிழ்” என்ற பாடத்தை கல்வி நிறுவனங்களில் கற்பிக்க வேண்டும்.

தமிழ் முன்னோரின் அறிவியல் அறிவை அடித்தளமாகக் கொண்டு நவீன அறிவியலை அத்துடன் இணைத்து இங்கு அறிவியல் வளர்ச்சி காண வேண்டும். இந்த அறிவியல் வளர்ச்சி ‘எவ்வுயிரும் நம் உயிரே’ என்ற தமிழர் அறத்திற்கு இசைய வளர வேண்டும். வள்ளலாரின் அறிவியல் பார்வையும், அறவியல் தேவையும் இதில் நமக்கு வழிகாட்டும்!

(நன்றி: தமிழ்த் தேசிய தமிழர் கண்ணோட்டம் மாத இதழ் - ஏப்ரல் 2019)



கட்டுரையாளர்:
**வே. சுப்ரமணியசிவா**
தொடர்புக்கு: 9688155886
மின்னஞ்சல்: Siva05cdm@yahoo.com

# ஏழைக்கும் என்றோர் நாள் விடியும்.. !

தகுதியற்ற தற்குறிகள்
தலைவனாக ஆனதனால்
தலை கவிழ்ந்து நிற்கின்றேன்
நாளும்..

பகுதிவிகுதி தெரியாத
பதருகளின் வாலறுக்க
போரோன்று மிக விரைவில்
மூளும்..

எண்ணற்ற குப்பைகளை
என்மேலே நீ கவிழ்க்க
எரிமலையாய் இருக்கின்றேன்
பொறுத்து..

பண்பற்று நீயின்று
பழிபோடும் வேலைகளை
உன் பல்லுடைந்து
போய்விடமுன்
நிறுத்து....

ஆலையில்லா ஊருக்கு
இலுப்பைப்பூ சக்கரைபோல்
நீ ஆளுவது உலகுக்கே தெரியும்..

கோழையே நீ கும்பிட்டு
குனிகையிலே குண்டு வைத்தாய்
அதோ..! தோற்குது பார்
உன்னிடத்தில் நரியும்....

ஆடும்வரை ஆடு உன்னில்
ஆடுவந்து மேயும்வரை
ஆடியநீ
அடங்குவது உறுதி..

எத்தனையோ ஆட்டங்களை
என் வாழ்வில் பார்த்தவன் நான்
அதனால்
பொறுத்துள்ளேன்
பலர் நன்மை கருதி...

அன்போடு புன்னகைத்து
அநியாயம் செய்தவர்கள்
நிம்மதியாய்
வாழ்ந்திடவா முடியும்.?

எத்தனைநாள் சென்றாலும்
எத்துயர்தான் வந்தாலும்
ஏழைக்கும்
என்றோர்நாள் விடியும்..!

–

கவிஞர். அஸ்மின்





# சிந்தையாலும் தோடேன்

மாற்றான் வீட்டு தோட்டத்து
மல்லிகையும் மணக்கும் என்றாலும்
பிறன்மனை நோக்காது இருத்தல்
தன்மனைக் காத்தல் ஆகும்!

சிலருக்கு மதுரம் தான்
மது ரம் கூட என்றாலும்
மதுரம் கண்டு நோயுற்றவர்களாய்
முடங்கிப்போய் கிடக்கிறார்கள் பலர்!

பொய் சொல்லி பாடல் இயற்றலாம்
பொய்ச்சொல்லி பாடையேற்றல் தகுமோ
வலியால் வலி மிகுமோ வலிமிகுந்து
மனம் நலிவாகுமோ!

கள்ளியென்றால் கன்னம்
சிவக்கும் காதலில் அங்கு,
கள்ளமென்றால் இழந்து நிற்பாய் கற்பு
தன் வினை தன்னைச் சுடாது
காக்கும் காமம்!

வழியில் கிடைப்பதும்
வழிதவறி கிடைப்பதும் ஒன்றாம்
மூன்றாமவர் பொருள் போல்
அவலம் தரும் இன்பம் வேண்டாமே!

மேற்ச்சொன்ன ஏதும் ஒன்றல்ல
எதுவும் சிந்தையாலும் தொடாதிருத்தல்
மானம் காக்க மட்டும் அல்ல போற்றவும் கூட!

–

மகிழை. சிவகார்த்தி



# துளிப்பாக்கள்

குளத்தில் எறிந்த கல்
தொடக்கி வைத்துவிட்டது
மீன்களின் நீச்சல் போட்டி

பட்டாம்பூச்சியின் மேல் சிதறும்
சில மழைத்துளிகளும் பறக்கின்றன
பட்டாம்பூச்சிகளாக

கொட்டிய சருகுகளின்மேல்
கால்களில்லா காற்று
மிதிக்கிறது சத்தமாக

தனிமை நடை
சருகு உடையும்போதெல்லாம்
சேர்ந்தே உடைகிறது இதயமும்

புல்லாங்குழல் ஊதுகிறேன்
அசையாமல் லயித்து ரசிக்கிறான்
எதிரில் செவிடன்

ஏறும் மனிதனைப் பார்த்து
ஓடுகிறது அணில்
உச்சியை முன் தொட

--

**சா.கா. பாரதி ராஜா,**
*38-3, கைலாசநாதர் கோயில் தெரு,*
*பெரிய நத்தம்,*
*செங்கல்பட்டு. 603002.*
*9944315732*

## எனக்கான

புதுசெருப்பு வாங்குவதற்கான
தேடலில்
தொலைந்திருந்தது...
அம்மாவின்
பழைய செருப்பிற்கான அடையாளம்!

***

## பூக்களை

அவசர அவசரமாய்
பறிக்கும் போதெல்லாம்
முட்கள் தரும் காயங்களில்
பூவின் நிறம்!

***

## தேவதைகளைப் பற்றி

கவிதை எழுத
நினைக்கும் போதெல்லாம்,
உன்னைத்
தேடிக்கொண்டிருக்கிறேன்...
அடுப்பங்கரையில் ஒளிந்து கொண்டு
என்னைத் திட்டிக் கொண்டிருக்கிறாய்!

***

## மகளின் பொம்மை ஒன்றை

மறைத்து வைத்துக்கொண்டு
காணாமல் போச்சு,
என சொல்லும் போதெல்லாம்
கண்களில் பெருமழை ஒன்றைத்
தொடங்கிவைக்கிறாள்...
எனது பொய் அடித்து
இழுத்துச்செல்லப்படுகிறது
கண்ணுக்குத் தெரிய தூரத்திற்கு ,
நான் தத்தளித்துக்
கொண்டிருக்கிறேன் ... அன்பெனும்
பெருவெளியில்!

***

## நேசித்தவர்களெல்லாம்

என்னைத்
தொலைத்துவிட்டார்கள்...
நான் தொலைந்து கொண்டிருக்கிறேன்
ஏதேனும் ஒரு கவிதைகளில்!

***

## வார்த்தைகளால்

வசந்தம் தராத காலத்திற்கு
நன்றி,
புன்னகைக்கும்
பூக்களைத் தந்ததற்கு!

***

## சொந்த ஊர் என்பது

வேறொன்றுமில்லை ...
போகும்போது அளவில்லா
இன்பங்களையும்
திரும்பும் போது தாங்க முடியா
வேதனைகளையும் தருவது தான்!

***

விபத்தொன்றில் இறந்தவனின்
புகைப்படத்தை
முகநூலில் பதிவிட்டு
ஆயிரக்கணக்கான
விருப்பக்குறியீடுகளை பெற்ற
மகிழ்ச்சியை பகிர்ந்து
கொண்டிருக்கிறான் ...
இன்னொரு முகநூல் பதிவில்,
மீண்டும் மீண்டும் மரித்துக்கொண்டே
இருக்கிறான் விபத்தில் இறந்தவன்!

***

## அப்பாவுக்கு தெரியாமல்

மறைந்து
புகைபிடிப்பவனை
நினைவுபடுத்துகின்றன....
மனைவிக்கு அஞ்சி
மறைந்து மறைந்து எழுதும்,
என் கவிதைகள்!

***

### மு.முபாரக்



---

# ஏமாற்றுப் பொன்முலாம்

யூகத்தின் மக்கிய கழிவுகளால்
என்னைப்பற்றித் தீர்மானித்து
இதயம்புக நினைத்தல்
எளிதல்ல உங்களால் எப்பொழுதும்
என் நேர்மையின் மர்ம விருட்சத்தில்
பூக்கள் பிரம்மிக்கும் எழிலானவை
கனிகளோ சுவைமிகுந்த விஷம்
சோங்கி எதிர்நிற்கும் பலகீனத்தைக்
கூரிய பற்களால் கிழித்துக்
கண்ணீரோடு அழுகிய தசையுண்ணும்
வஞ்னையின் ஓநாய்நான்
என் கர்ஜனை யாதுமற்றவெளியில்
நிசப்தத்தின் ஆழ்ந்த உறக்கம்
களைக்கும்
போர்க்கால வெற்றிசை
புழுதிப்படிந்த கரிசல்புலம்புல்
நேயத்தின் இறுகிய வனப்பால்
அடர்ந்து தழைத்திருக்கும்
பசுமைக்கொஞ்சும் காட்டில்
தீப்பொறியோடு உலவும்
நயவஞ்சக நரித்தனம் எனது
நேர்கொண்ட பார்வைமேல்

பிம்பங்கள் போர்த்தி
சலிக்காமல் பகைகொள்ளும்
வரட்டுக்கௌர விரும்பி
ஒற்றுமையின் தடாகத்தில்
கதண்டுகளை வளர்த்துத்
தாமரைக்கும் அல்லிக்கும்
தங்கல்யுத்தம் மூட்டி
நமுட்டுச்சிரிப்போடு
வேடிக்கைப்பார்க்கும்
விவரமுள்ள வேடதாரி
காரியம் நிறைவேற
காக்கையின் கைக்கூலி நான்
வீரியமின்மையைத் தப்பிக்க
அதட்டலும் மிரட்டலும் கையாளும்
அடாவடி மைக்காரன் நான்
என் சறுக்கல்களின் காயங்களில்
குருதி கொப்பளிப்பினும்
மீசையில் மண் ஒட்டுவதில்லை
இராவணத் தலையின்
கொடூர முகங்கள் மேல்
பால்வடியும் தேன்வடியும் அரிதாரம்
நீங்கள் கண்டு மயங்குபவை
என் வரவேற்பின்
சிவப்புக்கம்பளங்கள்
முட்களின்மேல் விரிந்திருப்பவை
என் ஏகபோக விருந்தனைத்தும்
நாள்குறித்த நரபலி வைபவம்
என்மேல் வீசும் கவிச்சையை
நறுமணத் திரவியங்களால்
ஒளித்துவைத்திருக்கிறேன்
கள்ளங்கபடமாய் என்றும்
என் புன்னகையின் வேர்களில்
பழிவாங்கும் எண்ணம்
பயிற்சிகொண்ட பாசிச இராணுவம்
என்னுள் மின்னும் பளிச்சிடல்கள்
கண்முன் தோன்றும்
ஏமாற்றுப் பொன்முலாம்
என்னைத் தொடரவிரும்பிடா
நிழலின் சாட்சியால் வேண்டுகிறேன்
தயைகூர்ந்து தப்பித்துக்
கொள்ளுங்கள்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
பரவி
மெல்லிய இதயங்களை அப்பளமாய்
நொறுக்கி உண்ணும்
இக்கொடுநோய்
தங்களையும் தொற்றி
ஆள்சேர்க்கலாம் எச்சரிக்கை.

பொன்.தெய்வா,
ஐவேலி.



# ஒருதுளி ரத்தமில்லை

எப்போதும் தாத்தாவின்
பக்கத்திலேயே காவலாளியாய்
நின்று கொண்டிருகிறது.
கைத்தடி.

அர்த்தமற்ற வார்த்தைகள்
பொருள் தருகிறது.
மழலைச்சொல்.

அந்தப் பறவைக்கும்
எனக்குமான
இடைவெளியை விடவும்
அவளுக்கும் எனக்குமான
தூரம் அதிகம்.
இணைபிரிந்த பறவை
சிலநொடிகள்
ஓரிடத்தில் அமராமல்
அங்கெங்குமாய்
அலைந்து திரிவது போல்
என் மனமும்
அவளைச் சுற்றியே
வட்டமிடுகிறது.

விருப்பமின்றி
கருமை வண்ணம் ஏந்தின
சருகானப் பூக்கள்.

வந்த வழியைப் பார்த்தது
சுவற்றினை முத்தமிட்டது
பந்து.

பாலிருக்கும்
திசையில் குதித்தது.
மதில்மேல் பூனை.

நடுமண்டை
வழுக்கையாய் இருந்து.
வரப்பிற்கு.

குழந்தை கொடுத்த
முத்தத்தில் கன்னமெல்லாம்
தேன்.

குத்திக் கிழிக்கிறேன்
ஒரு துளி ரத்தமில்லை
காற்றில்.

துள்ளி குதிக்கிறது
கால்களில்லா
பந்து.

குவித்த விரல்களை
மொட்டென்றும்;
விரித்த விரல்களை
பூவென்றும் சொல்கிறாள்
நாட்டியம் பழகும் மகள்.

கையசைத்து மகிழும்
பிள்ளைகளுக்கு பச்சைக்கொடி
காட்டுகிறது தொடர்வண்டி.

வீதியில் விபத்து
வாசலில் சிதறிய
திருஷ்டி பூசணி.

குளத்தில்
வடைசுடுகிறாள் பாட்டி.
நீரில் தெரியும் நிலா பிம்பம்.

ஆழ்மனதில்
அசைபோட்ட கவிதை
அசல் மாறியிருந்தது நகலில்...!

ஊதத்தொடங்கினான் கலைஞன்
அழகாகப் பாடுகிறது
வாயில்லாப் புல்லாங்குழல்...!

மலருக்கு மலர் தாவிப் பறக்கும்
பட்டாம்பூச்சியாய்
கவிதைக்குக் கவிதை
தென்றலாய்த் தவழ்கிறது
மனது...!

- கவிதைகள் ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



---




T.ஷாலினி,
ஜெயங்கொண்டம்

# மொட்டை மாடி கவியரங்கம்...

நிசப்தம் ...

இருள்சூழ்ந்த சுற்றம்..

என் எதிரில்...

நீலவன்ன சீலை மாற்றி கருப்பு நிற சீலை பூண்ட வானம்....

வானின் மூலையில் மதியவள்...
அவள் ஆடை கலைந்த முத்துக்கள் நட்சத்திரங்களாக...

தத்தளிக்கும் மனதை தணிக்கும் தென்றல்..

இரவின் அமைதியுடன் இதமான ஒரு குரல் ....

மானிடா...

தூங்கவில்லையா...என்று...

திடிக்கிட்ட நான் சுற்றும் சுழன்று பார்க்க பேசியது நான் தான் என்றது மீண்டும் அந்த குரல்....

மனம் அது என்னிடம் எழுந்து ஓடு... பேசுவது மாயமோகினி என்று எச்சரிக்க...

அதை உணர்ந்த அந்த குரல் சிரித்தது...

பயம் கொள்ளதே... நான் உன் கடந்த கால நினைவு தான் என்று என்னை ஆஸ்வாச படுத்தியது ...

தெளிந்த நான் அந்த குரல் உடன் உரையாட துடங்க...முதலில் அது என்னிடம் சொன்னது நிலாச்சோறு ன்
நினைவுகளை....

கடந்து சென்றேன் ஒரு 20 வருட கால முற்பகுதிக்கு.. நினைவில் வந்து நின்றது

என் தாத்தாவும் , பாட்டியும்...கையில் பால்சோற்றுடன்....

அறைகால் சட்டை அணிந்த நான் என் தாத்தாவின் மடியில் அமர்ந்து என் பாட்டி பரிவுடன் ஊட்டியதை மென்றுகொண்டே என் தாத்தா சொன்ன கதைகளை கேட்டது நினைவுக்கு....

பள்ளி முடிந்து வந்து ஆடி பாடி விளையாடிய பொழுதுகள் கன் முன்...

சிட்டு குறுவிகளுடன் சிட்டாய் கைகளை அசைதவாரு பறந்த தருணங்கள் கண்முன்...

ஓடாத சைக்கிளின் ஓடிய டயர் கள் இன்றும் என் நினைவில்...

பணம் நொங்கு சக்கரம் கொண்ட என் நடை வண்டி காற்றில் சுழலும் என் காதாடி... மீண்டும் என் நினைவில்...

ஓடி ஆடி களைத்த வேளையில் பாட்டி தரும் நீராரம் மீண்டும் என் நினைவில்...

அஞ்சு பைசா பத்து பைசா என்று கையில் கிடைக்கும் காசின் மதிப்பு பிளாட்டின் கிரெடிட் கார்டுகளில் கூட இல்லை...

நான் சுவைத்த ஆரஞ்சு மிட்டாய்... தேங்க மிட்டாய் இன் சுவை மீண்டும் என் கன் முன்....

இனினைக்க இனினைக்க சாப்பிட்ட கரும்பு...
புளிக்க புளிக்க சாப்பிட்ட மாங்காய்...
புளியங்காய்...

காக்கா கடி கடித்த நண்பனின் மிட்டாய் என்று மீண்டும் எல்லாம் என் நினைவில்...

கண்கட்டி அம்மாவுடன் விளையாடிய கண்ணாமூச்சி...

கணக்கு பாடம் சரியா வராது அப்பாவிடம் வாங்கிய கொட்டு...

பள்ளிவாகனம் இன்றி நண்பர்களுடன் கைகோர்த்து பேசிய கதைகள் நினைவில்...

கபடமற்ற தோழி...

வஞ்சனை இல்லா அன்பு...
எதிர்பார்ப்பு இல்லா பாசம்
எல்லாம் கன் முன்...

எங்கு கேட்டாலும் தண்ணீர் கிடைக்கும்
வெயிர் காலங்களில் மரங்கள் நிழலை கொடுக்கும்... கட்டிடங்கள் அல்ல..

பாதைகள் மாறிய சமயங்களில் பறவைகள் தான் வழிகாட்டி...

பஞ்சாயத்து ஒளியும் ஒளியும் இல்.. வேற்றுமைகள் களைந்து ஒற்றுமை ஆனோம்...

வானொலி ஒன்றே அன்றிய தகவல் களஞ்சியம்...எல்லாம் நினைவில்...

கவலையற்ற மனிதர்கள்... பணத்தை மதிக்காது பந்தத்தை மதித்த மக்கள் என்று எல்லாம் மீண்டும் நினைவில்....

தொலைந்து போன பல விஷயங்களை... நினைவின் குரலுடன் பேசியது என்றும் நினைவில்....

மனம் மீண்டும் புத்துணர்ச்சியை பெற கவலைகளால் சூழிந்த மேகங்கள் வெளிற மகிழ்ச்சி என்னும் சூரியன் உதிக்க மொட்டைமாடி கவியரங்கம் நிறைவு பெற்றது... நீங்கா நினைவுகளுடன்.

--
விருதை
**கவிபாராதி. சதிஷ்**

# காத்திருக்கிறேன் உனக்காக!!!

அனுதினமும் என் அன்பானவளின் வார்த்தைகளை கேட்க ஆவலுடன் காத்திருக்கிறேன்!...

மை பூசிய கண்களை கொண்ட அவளின் அழகானமதிமுகத்தை நேரில் கண்டு மனமயங்க காத்திருக்கிறேன்!...

ஒய்யார நடைபோட்டு ஓவிய சிலையாய் என் கண்முன் வந்து கவிதையாய் காட்சியளிக்க காத்திருக்கிறேன்!...


உன் கைகோர்த்து ஊர்சுற்றி களைத்து, உன்னோடு அமர்ந்து உன் தோழில் சாய்ந்து கதைபேச காத்திருக்கிறேன்!...

காலங்கள் கடந்தாலும் கரையாமல் இருக்கும் உன் நினைவுகள் எனும் செல்வங்களை இன்னும் சேர்க்க காத்திருக்கிறேன்!...

உயிராய் உறவாய் உடனிருக்கும் ஓர் தன்னலமற்ற உன்உறவுக்காக காத்திருக்கிறேன்!...

நிலைத்து இருக்க முடியாது என்றபோதும், நீங்காமல் நம் உறவு நீடிக்க இறைவனிடம் வேண்டி காத்திருக்கிறேன்!...

உனக்காக உயிருள்ளவரை காத்திருப்பேன்!...
- உயிர் தோழனின் சித்திகரிப்பு...!



–
கார்த்திகா ராமதாஸ்,
பொறியாளர்,
வடுவூர் புதுகை.

# தெய்வாத்தா பாட்டி

அந்த பழுப்பு நிற நாய்க்குட்டியின்
நெற்றிப்பொட்டில் வெள்ளை கோடு

வெள்ளை நிறம் பாதியும்
பழுப்பு நிறம் மீதியுமாயிருந்த
அடுத்த ஒரு நாய்க்குட்டியின்
கண்களைச் சுற்றி கருப்பு வளையம்

கண் பட்டுவிடும் கருப்புநிறத்தில்
முறுக்கேறிய உடலை காட்டுமந்த
நாய்க்குட்டியின் கால்கள் மட்டும்
வெள்ளை

இருபத்திரண்டு நகங்களோடு
இருக்குமந்த
மற்றொரு நாய்க்குட்டியின்
வாலில் வெள்ளை
வாயில் கருப்பு

தொலைதூரத்தில் தொலைந்திருந்த
உறவுகள் ஆளுக்கொரு
நாய்க்குட்டியை
உரிமையோடு சண்டையிட்டு
எடுத்துச்சென்ற பின்

ஒட்டிய தோலும்
எண்ணுவதற்கெளிதாக தெரிந்த
எலும்புகளோடும் வீதியை
வெறித்தபடி பார்த்த
தெருவோர நாய்க்கும்
தெய்வாத்தா பாட்டிக்கும் உரிமை
கொண்டாடத்தான் ஒருவருமில்லை...

# சாமி தாத்தா

எங்கள் கிராமத்தின்
கிழக்கால
வீதியில
வடகோட்டு
தெருவின்
தெற்கு பார்த்த
வீடு
சாமி தாத்தா வீடு

அஞ்சு
மணிக்கெல்லாம்
அலாரமேதும்
இல்லாமலே
எழுந்திருந்து
விடியும் முன்னேயே
வீட்டு வேலைகளை
முடித்து இருப்பார்

ஆறு
மணிவாக்கில்
ஆறுமுகசாமி
கோவிலில்
தரிசனம்
முடித்துவிட்டு
நெற்றியில்
சாலையின்
நடுவே உள்ள
வெள்ளை கோடு
கணக்கா
மூணு கோடும்
நடுவுல
சிவப்பு விளக்கா
குங்குமமும்
வைத்திருப்பார்

ஏழு மணி
என்றவுடன்
எல்லா
தாவரங்களையும்
தடவி தடவி
தாலாட்டுப் பாடி
தாய்ப்பால்
ஊற்றியிருப்பார்

எட்டு மணி
ஆகுறப்போ
எல்லா
பறவைகளும்
எங்கிருந்து தான்
வருமோ தெரியல
எல்லா
திசையிலிருந்தும்
வந்த
பறவைகளை
தானியங்களைத்
தூவி
தனித்தனியே
பெயர் சொல்லி
பேசிக்கொண்டிருப்பார்

ஒன்பது மணி
ஆகுமுன்னே
கூடையில
சாப்பாடோட
கோயில் வாசலிலுள்ள
பிச்சைக்காரர்களுக்கு அன்னதானமிட
ஆஜராகி விடுவார்

பத்து
மணியிலிருந்து
அவரை யாரும்
பார்க்க
முடிவதில்லை

மீண்டும்
மாலை
நாலுமணிக்கு
நடுங்கும்
குரலோடு
நாதஸ்வரம்
இசைத்திருப்பார்

அஞ்சு மணி
முதல் அனைத்து பிள்ளைகளுக்கும்
இலவச பாடம்
நடத்தி
இனிக்க இனிக்க
கதைகள் சொல்லி இன்புற்றிருப்பார்

ஆறு மணி
ஆனவுடனே
ஏழு வயது
சிறுவனாகி
எல்லா
பிள்ளைகளோடும்
கபடி ஆடி
களித்திருப்பார்

ஏழு மணி முதல்
பத்து மணி வரை
புதிய வானொலி
பெட்டியோடு
பழைய
பாடல்களை
பாடிக்
கொண்டிருப்பார்

நடுநிசி இரவிலும்
விளக்கு
வெளிச்சத்தில்
படித்துக் கொண்டும்
எழுதிக் கொண்டும்
இருப்பார்

மாறாத
இந்த பணிகள்
மாறாமலே
இருந்தது

நான்
மழலையாக
இருந்து
மருத்துவனாக
மாறும் வரை

வெளியூர் சென்று
வெகு ஆண்டுகள்
ஆன பின்
கிராமம்
திரும்பிய
நான்

கிழக்கால
வீதியில
வடகோட்டு
தெருவுல
தெற்கு பார்த்த
வீட்டை பாக்க
அந்த
தெருப்பக்கம்
போயிருந்தேன்

சாமி தாத்தா
வீடு
சமாதி
ஆகியிருந்தது...

## நேசமுடன் ஈசு



# செந்தார் கிள்ளை

புணரும் யானையின் கைப்போல்
வளைந்து விளையும்
தினைக்கதிரைத் தின்ன வரும்
செந்தார் கிளிகளை
நீயும் நானும் சேர்ந்து தானே
அன்று விரட்டினோம்

கிளிகள் வராத நாட்களில்
காக்காய்ப் பொன்னால் கண்ணெழுதி
மாதுளம் பூவால் மூக்கெழுதி
மரவல்லி இலையால் உடலெழுதி
நந்தியாவட்டை மற்றும் பனையோலை இலையால் சிறகெழுதி
வெள்ளை அரளி மற்றும் செவ்வரளி மொட்டுகளால் வாலெழுதி
உனக்கு நான் தானே
பொய்க்கிளி செய்து கொடுத்தேன்

பிள்ளையைத்
தோள் மாற்றுவது போலத் தான்
நீ கிள்ளையைத் தோள் மாற்றுகிறாய்

ஒரு போதும் மாற்றிவிடாதே
ஆண்டாளின் இடது மென்றோளில்
இருக்கும் கிளியை
மீனாட்சியின் வலது தடந்தோளுக்கு

ஆண்டாளின் கிளி சுகப்பிரம்மம்
மீனாட்சியின் கிளி பரம்பிரம்மம்

உன் கைக்கிளையைக்
கொழுங்கொம்பாக பற்றும்
அந்தப் பவளச் செவ்வாய் கிளி
என் கைக்கிளைக்கும்
தூது செல்லுமா?

தூது சென்று கைக்கிளையை
இருதலைக் காதலாக்குமா?

நீ என்னோடு பேசாதா நாட்களில்
உன் கிளியையாவது
என்னோடு பேசச் சொல்

கோலக் கிளி மொழி
குத்தல் எடுத்தாலும்
உமி விலகி
அரிசி தெரிகிறதா என்று பார்ப்போம்

இலக்கியத்தில் எது பிடிக்கும்
என்று கேட்டால்
இப்போதெல்லாம்
ஐங்குறுநூற்றில் வரும்
கிள்ளைப் பத்து என்று தான்
சொல்கிறேன்

நிறங்களில் கூட இப்போது
கிளிப்பச்சை தான்
மிகவும் பிடிக்கிறது

மாங்காயில் கூட
கிளிமூக்கு தான்
நிரம்பப் புளிக்கிறது

இப்போதெல்லாம்
எந்தக் கிளி ஜோசியக்காரனைக்
கண்டாலும்
ஜோசியம் பார்க்கிறேன்

சீட்டெடுக்கும் கொஞ்ச நேரமாவது
அதற்கு விடுதலை கிடைக்கட்டும்
என்று...

–

**மு. ஆறுமுகவிக்னேஷ்,**
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்,
தமிழ்நாடு.

---

# கூட்டைவிட்டு

எட்டுவைக்காத
பறவைக்கு
கூடே சிறைதான்..

கூட்டைவிட்டு பறந்த
பறவைக்கு
காடுகள் கூட
வீடுதான்.....!!!!!

--------

# ஓட்டை குடிசை

வீடு தான்

மழை வந்தால்
ஒழுகும் தான்

இருந்தும் மழை வேண்டி
வேண்டுகிறான் விவசாயி ...!!!!

**ச. இராஜ்குமார்**
திருப்பத்தூர்

# மாற்றம் ஒன்றே மாறாதது !

மாற்றம் ஒன்றுதான் இங்கு
நிலையாகும்....!
உலகில் மாறா எதுவும்
அழிந்துவிடும்....!?

உலகின் தோற்றம் தோன்றிய
போதே..!
மாற்றமும் அன்றே தோன்றியது..!
இதனை புரிந்தோர் வாழ்கின்றார்....!
மற்றவரெல்லாம் வீழ்கின்றார்....?

உலகில் மொழிகள் பல்லாயிரம்...!
வாழும் மொழிகள் சில நூறு...!
மாற்றங்கள் உணர்ந்து உள்வாங்கி ..
மாறிய மொழிகள் வாழ்கின்றன....!?
மற்றவையெல்லாம் வீழ்கின்றன ....?

உலகில் வியாபாரம் பல கோடி..!
தொடர்ந்து நிலைப்பவை சில
மட்டும்...!
மாற்றம் என்பது வியாபார தந்திரம்...
என புரிந்தோர் மட்டும்
வாழ்கின்றனர்...!
மற்றவரெல்லாம் காணாது போயினர்
..!

உலகில் மனித இனம் பல உண்டு...!
எல்லா இனமும் நிலைப்பதில்லை...!
நாளைய மாற்றம் அறிவால்
அறிந்து...!
தன்னை செதுக்கி உருமாற்றி....!

உயிர்ப்போடு இருப்பவை மட்டுமே...
பெருமைப் பேசும் எந்நாளும்...!
உருமாறா எதுவும் உதவாது
ஒருநாளும்..!?

மாற்றம் ஒன்றே மாறாதது...!
புரிந்து கொண்ட கொரானா கூட ....!
தன்னை உருமாற்றி ...
இரண்டாம் அலையாய்..!
மிரட்டுகிறது மீண்டும் உலகில்...!?

மாற்றமெனும் மந்திரச்சொல்லின்
மகத்துவம் அறிவோம்...!
மானுடம் காப்போம்...!?

— முனைவர். சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி



# எனக்கு மரணமென்பது இல்லை

ஆனால் வளர்ச்சி உண்டு
அவரவர் தன்மைக்கேற்றவாறு
என்னை வளர்ப்பார்கள்
சிலர் சிரிப்பார்கள் சிலர்
கைதட்டுவார்கள் என்னைப் பார்த்து
என்னை வளர்த்தவர்களுக்கு பல
பெயருண்டு ஆனால் எனக்கு ஒரே
பெயர் தான் கவிதையென்று

# பேனா பிடித்தவன்

போனதில்லை
வீணா

பேனாவுக்கென்றே பிரத்யேகமாய்
வடிவமைக்கப்பட்டது சட்டைப்பை

சட்டைப்பை வைக்க
தேர்வு செய்த இடம்
இதயம்

சட்டைப்பையில் நிமிர்ந்து நிற்கும்
பேனாவின் காலடியில்
சில்லறைக்காசுகள்

சட்டைப்பையில் எவ்வளவு
இருக்கிறதென்று உன்னைப்போல்
குனிந்து பார்ப்பதில்லை
பேனா

அறிமுகமில்லாதவனும்
உன்னிடம் கடனாய்க் கேட்பது
பேனா

கடனாய் வாங்கி
உடனே திருப்பிக்கொடுப்பது
பேனா மட்டும் தான்

கடனாய் வாங்கியவன்
என்ன எழுதினானென்று
உயிரே போனாலும் சொல்லாது
பேனா

பணத்தை திருப்பிக் கொடுக்கும்
கடனாளிகள் யாரும்
நன்றியுரைப்பதில்லை

பேனா வாங்கி எழுதியவன்
சொல்ல மறந்ததில்லை
நன்றி

பேனாவுக்கு என்ன தெரியுமென்று
எனக்குத் தெரியாது
எனக்கென்ன தெரியுமென்று
என் பேனாவுக்குத் தெரியும்

சட்டைப்பையைத் தவிர
வேறு எங்கு வைத்தாலும்
அழகாய் இருக்காது உன்
தோற்றம்

நான் நிமிர
பேனா குனிந்தது

# வள்ளுவனிடம் குறளைக்

கற்றுக் கொண்டு
விவேகானந்தரிடம் ஒப்புவித்துக்
கொண்டிருக்கிறது கன்யாகுமரிக்
கடலலைகள்.



–
ஆனந்தன்,
திருப்பூர்



அட்டைப்பட
ஓவியம்:

இரா.மதுவர்ஷினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine